# SC No.56/2020

**எதிரி ஆஜர்.**

**அ.சா.12 திரு. விநாயகமூர்த்தி, த/பெ.**

**தேதி-08.03.2024**

இன்று மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

அ.சா.ஆ.19 ஆனது தஞ்சியப்பன் கண்ணனுக்கு எழுதிக் கொடுத்தது போல் உள்ளது என்றால் தஞ்சியப்பன் கண்ணனுக்கு எழுதிக் கொடுத்தது தான். மேற்படி ஆவணத்தின் அசல் கண்ணனிடம் தான் இருக்கும் என்றால் இதில் 5 பேர் கையொப்பம் போட்டு நகலை கண்ணனிடம் கொடுத்துவிட்டு அசலை தஞ்சியப்பன் வைத்துக் கொள்கிறார். நான் சொல்வது இயற்கைக்கு முரணானது என்றாலும், கண்ணனிடம் தான் அசல் இருக்கும் என்றாலும், தஞ்சியப்பனிடம் அசல் இருக்கும் என்பது சரியானது அல்ல என்றால் சரியல்ல.

பஞ்சாயத்தாரர்கள் 6 பேர் யார் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் யார் யார் கையொப்பம் போட்டார்கள் என்று எனக்கு தெரிகிறது என்று சாட்சி ஆவணத்தை பார்த்து சாட்சியம் அளிக்கிறார். 27.01.2016 என்று தேதி அசலாக அ.சா.ஆ.19 ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அவ்வாறு எங்கள் கோப்பு ஆவணத்தில் இல்லை. தேதி தனியாக எழுதியதாக நீதிமன்றத்தில் ஆவணத்தில் தனக்கு தெரியவில்லை என்று சாட்சி சாட்சியம் அளிக்கிறார்.அ.சா.ஆ-19 சம்மந்தமாக நான் எந்தவொரு விசாரணையும் மேற்கொள்ளவில்லை என்றால் ஏற்கனவே சாட்சிகள் வழி சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என்று விசாரணையில் கூறியுள்ளதால் தனியாக விசாரிக்கப்படவில்லை.

அ.சா.ஆ-19ல் வழி சம்மந்தமான பிரச்சனையோ வேறு எந்த பிரச்சனை

என்றோ குறிப்பிட்டு சொல்லவில்லைஎன்றால் குறிப்பிடப்படவில்லை, ஆனால் இனி மேற்கொண்டு தங்களிடம் எந்தவொரு பிரச்சனையும் இனி வரும் காலங்களில் செய்ய மாட்டேன் என்று உறுதியளித்துள்ளார். இனி வரும் காலங்களில் என்ற வார்த்தை அ.சா.ஆ-19ல் இல்லை என்றால் சரியல்ல.இனி மேல் என்பதை இனி வரும் காலம் என்று நான் சொல்லிவிட்டேன்.

அ.சா.ஆ.19-ல்உள்ள 6 சாட்சிகளை நான் இந்த வழக்கில் சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.19ஆனது என்னால் உருவாக்கப்பட்ட ஆவணம் என்றாலும் தஞ்சியப்பன் எழுதிக்க கொடுக்காத ஆவணம் என்றாலும் சரியல்ல. அ.சா.ஆ.19ல் உள்ள கையொப்பம் தஞ்சியப்பனுடையது அல்ல என்றால் சரியல்ல. பிரேத விசாரணை அறிக்கையில் சான்று பொருட்கள் சம்மந்தமான காலத்தில் குறிப்பு ஏதும் சொல்லப்படவில்லை என்றால் 9வது காலத்தில் சொல்லியுள்ளேன்.

பிரேத விசாரணை அறிக்கையில் 9வது காலத்தில் அவ்வாறு குறிப்பிட்டு எந்தவொரு சான்று பொருளை பற்றியும் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் சான்று பொருட்கள் இருந்ததாக பிரேத விசாரணை அறிக்கையில் வேறு எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. பிரேத விசாரணை அறிக்கையில் 9வது காலத்திலும் 15வது காலத்திலும் எதிரிக்கும் அவரது மனைவிக்கும் காயம் ஏற்பட்டது சம்மந்தமாக சொல்லப்படவில்லை என்றால் சொல்லப்படவில்லை.

புலன் விசாரணை அதிகாரியான நான் வழக்கு மற்றும் எதிர் வழக்கிற்கான நடைமுறைகளை இவ்வழக்கில் பின்பற்றாமல், முறையான புலன் விசாரணை மேற்கொள்ளாமல் எதிரி மீது பொய்யான இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எதிரியை கைது

எதுவும் செய்யவில்லை என்றாலும், எதிரி எந்தவொரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், அதனடிப்படையில் எந்தவொரு பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியலல்ல.

இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் என் அலுவலகத்தில் வைத்து மேஜை வேலையாக செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எதிர் வழக்கு குறித்த தகவல்எனக்கு தெரிவித்த பிறகும் அதற்கான நடவடிக்கையை நான் மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. வட்ட காவல் ஆய்வாளர் என்ற அடிப்படையில் எதிர் வழக்கு குறித்த தகவல் எனக்கு தெரிவிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ K Vijaya,
Additional Sessions Judge,
Arani.